
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1125**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**160**

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...




# கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி!

## பெண்கள் நலனில் முன்னோடி முயற்சி!

தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் சரிபாதி விகிதத்தினராக இருக்கும் பெண்களுக்கு, அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, சமத்துவ உரிமைகளை சமூகரீதியாகவும், சட்டரீதியாகவும் வழங்கி, பாதுகாப்பு அளித்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். கடந்த ஐந்து ஆண்டுக்கால திராவிட மாடல் ஆட்சியில் 'மகளிர் உரிமைத் தொகை', 'விடியல் பயணம்', 'புதுமைப் பெண்' எனப் பல முன்னோடி திட்டங்கள்மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை பல படிகள் முன்னேற்றியுள்ளன, தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சி. அந்த வரிசையில், மகளிர் உடல் நலத்தில் கவனம் செலுத்தும் வகையில் தொடங்கிவைத்த திட்டம், கருப்பை வாய் புற்றுநோய் HPV (Human Papilloma Virus) தடுப்பூசித் திட்டம்.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 இலட்சம் பெண்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் புதிதாகக் கண்டறியப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 75 ஆயிரம் பெண்கள் இந்த நோயினால் உயிரிழக்கின்றனர். குறிப்பாக, பெண்களைப் பாதிக்கும் புற்றுநோய்களில், மார்பகப் புற்றுநோய்க்கு அடுத்தபடியாக, கருப்பை வாய் புற்றுநோய் கண்டறியப்படுகிறது. ஹெச்.பி.வி. (HPV) தொற்றின் காரணமாக கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படுவதாகவும், ஹெச்.பி.வி.-16 (HPV-16), ஹெச்.பி.வி.-18 (HPV-18) வகைகள் அதிக ஆபத்தானவை என்றும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த ஆபத்தில் இருந்து மகளிர் நலத்தைப் பாதுகாக்க வேண்டும் எனில், வளரிளம் பருவத்திலேயே தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும் என மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

### ஹெச்.பி.வி. தடுப்பூசி திட்டம் தொடக்கம்

எதிர்கால வளர்ச்சி இலக்குகளில் பொருளாதாரம், மனித வளம் மட்டுமல்ல மகளிர் நலமும் முக்கியத்துவம் கொண்டது என்பதை முன்னோடியாகச் சிந்திக்கும் திராவிட மாடல் அரசு, கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க, தமிழ்நாடு முழுவதும் ஹெச்.பி.வி. (HPV) தடுப்பூசி வழங்கத் திட்டமிட்டது.

குறிப்பாக, இந்த ஹெச்.பி.வி. (HPV) தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்துப் பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்கத் திட்டமிட்டு, இதற்காக 2025-26 -ஆம் ஆண்டில் 36 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தது.

இதையடுத்து, இந்தியாவிலேயே முதல்முறையாக வளரிளம் பருவப் பெண்களுக்கு இந்தத் தடுப்பூசித் திட்டத்தைத் தொடங்கியது அரசு. ஜனவரி மாதம் 27-ஆம் தேதி, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

HPV தடுப்பூசி திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 14 வயதுடைய 3 இலட்சத்து 38 ஆயிரத்து 649 பெண் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக, (Pilot phase) கருப்பை வாய் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 30,209 மாணவிகளுக்கு ஹெச்.பி.வி. (HPV) தடுப்பூசி போடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மாநிலம் முழுவதும் உள்ள 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு பிப்ரவரி மாதம் முதல் இத்தடுப்பூசி செலுத்தப்பட்டுவருகிறது.

> “புற்றுநோய் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு திகழ, திராவிட மாடல் அரசு முன்னெடுத்த முயற்சி இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளது.”

தமிழ்நாட்டில், ஏற்கெனவே தடுப்பூசி திட்டத்தின் கீழ் 11 வகையான தடுப்பூசிகள், கர்ப்பிணி தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் போடப்படுகிறது. தற்போது ஹெச்.பி.வி. (HPV) தடுப்பூசித் திட்டம் பெண்களைத் தாக்கும் கருப்பை வாய் புற்றுநோய் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு அளிக்க உள்ளது.

### அரசு மருத்துவமனைகள்

இந்தத் தடுப்பூசியை 9 வயதிலிருந்து 45 வயது வரை உள்ளவர்கள் போட்டுக் கொள்ளலாம் என்றாலும், 9 வயதிலிருந்து 14 வயதுக்குள் இருக்கும் சிறுமிகள் இந்தத் தடுப்பூசியைப் போட்டுக்கொண்டால் பலன் அதிகமாக இருக்கும் என ஆய்வுகள் சொல்கின்றன. இந்தத் தடுப்பூசியின் விலை வெளிச்சந்தையில் 28 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படும் நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் விலையில்லாமல் 3 இலட்சத்து 38 ஆயிரத்து 649 பெண் குழந்தைகளுக்கு அளிக்கிறது. அரசு மருத்துவ மனைகள், அரசு மருத்துவக் கல்லூரிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள்வழி இந்தத் தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.




புற்றுநோய் தாக்கத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த இயக்கத்தின்மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில், பல தொலைநோக்கு மற்றும் புதுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக, தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தையும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

புற்றுநோய் என்பது மக்களின் நலத்திற்குப் பெரும் தீங்காக இருந்து வருகிறது. குறிப்பாக, வாழ்க்கை முறை சார்ந்த மாற்றங்களால் ஏற்படும் புற்றுநோய்கள் அதிகரித்து வருவதால், ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான அணுகு முறையைச் செயல்படுத்துவது அவசியமாகி யுள்ளது. அந்த வகையில் புற்றுநோய் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு திகழ, திராவிட மாடல் அரசு முன்னெடுத்த முயற்சி இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளது. எல்லோரும் நம்முடன் என்பது மட்டுமல்ல; எல்லோரும் நலமுடன் என்பதே திராவிட மாடல் அரசின் நோக்கம், கொள்கை. அதை நிறைவேற்றிக்கொண்டிருக் கிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

**...சாதனை தொடரும்**

# தொடரட்டும், தமிழ்நாட்டில் சாதனைகள்!




சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்திருக்கும் நிலையில், தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு, தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஜனநாயக சக்திகளும் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றன. இந்நிலையில், திராவிட மாடல் அரசுக்கு ஆதரவாக 'தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்– தி.மு.க. ஆட்சியை உறுதி செய்வோம்! மதவெறி அரசியலை விரட்டி அடிப்போம்' என்ற முழக்கத்தோடு திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாடெங்கும் ஆயிரம் தெருமுனைக் கூட்டங்களை நடத்திவருகிறது.

ஐந்து ஆண்டுக்கால ஆட்சியின் சாதனைகள், பொருளாதார வளர்ச்சியில்; பெண் கல்வியில்; பள்ளிக்கல்வியில்; ஏற்றுமதியில்; தனிநபர் வருவாயில்; சமூக வளர்ச்சியில் தமிழ்நாடு எட்டியிருக்கும் உயரம், இப்படி ஒரு வளர்ச்சியை இந்தியாவின் வேறெந்த மாநிலமாவது எட்டியுள்ளதா என்ற விளக்கங்களுடன், இந்தப் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றனர். பிப்ரவரி 28-ஆம் தேதி, தாம்பரத்தில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில், அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, கழக மாணவரணி துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் மற்றும் வி.சி.க., ம.தி.மு.க., ம.ம.க., சி.பி.எம். உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கூறுவது போல, இது தமிழ்நாட்டுக்கும் என்.டி.ஏ.வுக்கும் இடையிலான போட்டி. இந்தப் போட்டியில், டெல்லி ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளை முறியடித்து, தமிழ்நாட்டின் சுயமரியாதையை நிலைநாட்டிட தொடரட்டும் திராவிடப் பிரச்சாரங்கள்!

# ப்ளாஷ்பேக்



## வழக்கறிஞராகப் பதிவு செய்யும் முன் வாழ்த்து!



பா.விஜயகுமார்

2004-ஆம் ஆண்டு, வழக்கறிஞராகத் தமிழ்நாடு பார் கவுன்சிலில் பதிவு செய்வதற்கு முன்னர், நானும் தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் – மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் சு.கல்யாணசுந்தரம் அவர்களின் புதல்வர் ஸ்ரீதர் அவர்களும், அண்ணா அறிவாலயம் சென்று கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடமும் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களிடமும் வாழ்த்துப் பெற்றோம். இருவரும் எங்களை வாழ்த்தியது, இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. கழகத்தில் மாவட்டப் பிரதிநிதியாகவும், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றியுள்ளேன். இந்தப் படம் 20 ஆண்டுகளாக என் இல்லத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

**– வழக்கறிஞர் பா.விஜயகுமார்,**
**மாவட்ட முன்னாள் வழக்கறிஞர் அணி அமைப்பாளர்,**
**சுவாமிமலை, தஞ்சை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# நம் வரலாறு

## இலக்கைத் தாண்டிய நிதி!

1966-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 7-ஆம் தேதி, சென்னை கடற்கரையில் நடைபெற்ற திருவண்ணாமலை வெற்றி விழா பொதுக்கூட்டத்தில், கழகத் தேர்தல் நிதியாக 10 இலட்சம் ரூபாய் திரட்டப்படும் என அறிவித்தார் கலைஞர். அப்போது வரை 5 இலட்சம் ரூபாய் திரட்டி இருந்தார். அடுத்த ஐந்து மாதங்களில் மீதமுள்ள 5 இலட்சம் ரூபாய் திரட்ட, அவர் எழுதிய 'காகிதப் பூ' நாடகம் கை கொடுத்தது. திருச்சி, கடலூர், கள்ளக்குறிச்சி, மன்னார்குடி, தஞ்சாவூர், திண்டிவனம் எனத் தொடர்ச்சியாகப் பொதுக் கூட்டம், நாடகம் நடத்தி நிதி திரட்டினார். விருகம்பாக்கம் மாநாட்டின் நான்காவது நாளில், கழகப் பொருளாளராக அண்ணாவிடம் அவர் அளித்த தொகை ரூ.11 இலட்சம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131